# நூல்நேசச் செல்வர்

# 2013




சேலம் மாவட்டம், மேட்டூர்– ' தந்தை அறக்கட்டளை ' சார்பில் மேட்டூரில் 02.02.2013 ஆம் தேதி நடைபெற்ற நிகழ்வில் த. ஸ்டாலின் குணசேகரன் அவர்களுக்கு ' நூல்நேசச் செல்வர்' விருது வழங்கப்பட்டது.

ஈரோடு புத்தகத் திருவிழாவை தொடர்ந்து சமூக நோக்கில் சிறப்பாக நடத்தி வருவதை வைத்தும், பாரதி விழாவை மாநிலந்தழுவிய நிகழ்ச்சியாக பல்லாண்டுகளாகத் தொடர்ந்து நடத்திவருவதைப் பாராட்டியும், வாசகர் வட்டங்களை பல ஊர்களிலும் கல்வி நிலையங்களிலும் அமைத்து புத்தக வாசிப்பிற்கு அடித்தளமிடுவதை அங்கீகரித்தும், புத்தக வாசிப்பு குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடம் ஏற்படுத்திவருவதைக் கருதியும் இவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

இவ்விருதினை தமிழ்க்கடல் நெல்லை கண்ணன் அவர்களும் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கே.மகரபூஷணம் ஐ.ஏ.எஸ் அவர்களும் இணைந்து வழங்கினர்.


நல்ல புத்தகங்களுக்கு இடையே
எனது காலத்தை கழிக்கவே
நான் விரும்புகிறேன்– ஜவஹர்லால்நேரு.
ஆண்டு தோறும் "புத்தகத் திருவிழா" சிறப்பாக
நடத்தி மக்களுக்கு விழிப்புணர்வை
ஏற்படுத்தி வருபவரும், மகாகவி பாரதியார்
நினைவு நாளில் தகுதியுள்ள அறிஞர்
பெருமக்களுக்கு "பாரதி விருது" வழங்கி
அர்ப்பணிப்பு உணர்வோடு சமூகப் பணியினை
சிறப்பாக ஆற்றுபவருமான
ஈரோடு
திரு. த.ஸ்டாலின் குணசேகரன், B.Sc., B.L.,
அவர்களுக்கு
நூல்நேசச் செல்வர்
என்ற
விருதினை வழங்கி பாராட்டுவதில்
பெருமிதம் அடைகின்றோம்
அன்புடன்:
தந்தை அறக்கட்டளை
துவக்கம் அல்ல தூண்டுகோள்
மேட்டூர் அணை-1
02.02.2013